**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 199/2025**

**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ஜலால் முகமத்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. மீரா உசைன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர் (பணி ஓய்வு)** |
| **Village** | : | **சமுத்ராபட்டி, நத்தம்** | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **63** |
| | | | **Dated** | : | **08.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 8 (பட்டியல் சாட்சி 12), **திரு. ஜலால் முகமத்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2023ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்டம், ALGS பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 16.12.2021ம் தேதி 22.00 மணிக்கு தாடிக்கொம்பு காவல் நிலைய உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, நடுப்பட்டியைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் சக்திவேல் என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று, நிலையக் குற்ற எண். 805/2021, சட்டப்பிரிவுகள்

279, 337, 304(A) இ.த.சவின் படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 17.12.2021ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான திண்டுக்கல், பழனி ரோடு ராமையன்பட்டி பேருந்து நிறுத்தம் முன்பாக சென்று சாட்சிகள் செல்வபாண்டி மற்றும் சபரிபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தை விளக்கும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **நான் தயார் செய்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அன்றைய தினம் காவல் ஆய்வாளர் அயல் பணி காரணமாக வெளியூர் சென்றிருந்ததால், உயர் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் பிரேத விசாரணை மேற்கொள்வதற்காக அன்றைய தினமே காலை 08.00 மணிக்கு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சென்று, விபத்தில் இறந்துபோன மதன் பாலாஜி என்பவரின் பிரேதத்தை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.00 – 10.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கு சாட்சிகளான சக்திவேல், ராம்தியாகு, அசோக்குமார், பிரபா, கணேசன், செல்வபாண்டி மற்றும் சபரிபாலன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கை மேல் விசாரணை செய்வதற்காக ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வழக்கு கோப்பை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் மாலை 07.00 மணி என்றால் சரிதான். என்னிடம் புகார் மனு கொடுக்கப்பட்ட நேரம் இரவு 10.00 மணி என்றால் சரிதான். மூன்று மணி நேரம் காலதாமதமாகத்தான் புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாமதத்திற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றால், மருத்துவமனை போய்விட்டு, நிலையம் வந்து கொடுப்பதற்கு சற்று நேரம் ஆகும் என்பதால் அதை தாமதமாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்த வழக்கில் கார் ஓட்டி வந்த நபரான அசா. 2 ஐ நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேனா என்றால் இல்லை. அசா. 2 ஓட்டி வந்த கார் அதிவேகமாக ஓட்டிச் செல்லும் சன்ரூப் உள்ள கார் என்றால் சரிதான். அசா. 2 க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடமான திண்டுக்கல் – பழனி ரோட்டில் ஒரு வேகத்தடுப்பு உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. திண்டுக்கல் – பழனி செல்லும் வாகனங்கள் அந்த இடத்தில் மெதுவாகத்தான்போக முடியும் என்றால் சரிதான். சம்பவ இடம் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான், ஆனால் வீடுகள் இல்லை. அசா. 1 முதல் அசா. 5 வரை உள்ள சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்றால் சரிதான். ராமையன்பட்டி பகுதியைச் சேர்ந்த தனிநபர் சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தற்கான சாட்சிகளான சபரிபாலன், செல்வபாண்டி ஆகிய இருவரும் போதை தடுப்பு பிரிவின் கீழ் குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டு தற்போது சிறையில் உள்ளனர் என்றால், அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட அசா. 2 அளவுக்கு அதிகமான மதுபோதையில் இருந்ததால்தான் அவரிடம் நான் புகார் மனு பெறவில்லை என்றால் சரியல்ல, காயம்பட்டு இருந்ததால் அவர்

மருத்துவமனையில் இருந்தார். இந்த வழக்கில் இறந்துபோன நபர் அதிவேகமாக போன காரில் சன்ரூப்பில் நின்று கொண்டு இருந்ததால், திடீரென பிரேக் போட்டு, அதன் காரணமாக தூக்கி எறியப்பட்டு, எதிரி ஓட்டி வந்த வண்டியில் விழுந்து, அதன்பிறகு தான் இறந்து போனார் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் எதிரிதான் முதலில் வந்து புகார் கொடுத்தார் என்றாலும், அந்த புகார் மனுவை நான் மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் அசா. 2 தான் என்றாலும், அதை மறைத்துவிட்டு, எதிரி மீது பொய்யான வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 08.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.08 16:09:43 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**